**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts Madurai.

Calender : **SC.No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா.**28**
**Defence Court**

Name : சேசுராஜ்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 02.06.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசி அருகில் உள்ள அச்சன்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஓவிய ஆசிரியராக பணிபுரிந்துவருகிறேன். இதற்கு முன்பு தென்காசியில் கூலக்கடை பஜாரில் சோழா டிஜிடல் ஸ்டுடியோ என்ற பெயரில் வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்கும் கடை நடத்திவந்தேன். எனக்கு எதிரிகளை தெரியாது. தென்காசியில் மதக்கலவரம் நடைபெற்றது பற்றி தினசரி நாளிதழில்

தெரிந்துகொண்டேன். நான் சம்பவம் நடைபெற்ற அன்று குத்துக்கல் வலசையில் ஆக்ஸ்போர் பள்ளியில் நடைபெற்ற மாணவர்கள் சைக்கிள் பேரணியில் என் மகள் கலந்துகொண்டதால் நான் அங்கு சென்றிருந்தேன். அதனால் சம்பவம் பற்றி நேரில் தெரியாது. குற்றாலத்தில் ஆண்டுதோறும் சாரல் விழா நடைபெறும் . நான் அது போன்ற விழாக்களில் கலந்துகொள்ளவில்லை. எனக்கு எதிரிகளை பற்றி தெரியாது. நான் எதையும் கேள்விப்படவில்லை. என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் போலீசார் விசாரித்தபோது குற்றாலத்தில் நடைபெறும் சாரல் விழா நிகழ்ச்சியை பதிவு செய்யும் பொருட்டு 12.08.2007 அன்று ஞாயிறுகிழமை சென்றிருந்தேன் என்றும் எனக்கு அனுமதி கிடைக்காததால் சாரல் விழாவை கண்டுகளித்து கொண்டிருந்தேன் என்றும் அப்போது குற்றாலம் கலைவாணர் கலையரங்கம் அருகில் உள்ள பூங்காவில் அமர்ந்து நான் கட்டிட்ங்களுக்கான மின் விளக்கு ஒளியை ரசித்துகொண்டிருந்தபோது பள்ளத்தில் இருந்து இரண்டு நபர்கள் பேசிக்கொண்டிருந்தது கேட்டது என்றும் அவர்கள் தென்காசியை சேர்ந்த ஹனிபாமற்றும் அவர் சகோதரர் அலாவூதீன் என்றும் அவர்கள் இருவரும் குமார்பாண்டியனின் சகோதர்களை கொன்று விட செவ்வாய்கிழமை சரியானதாக இருக்கும் என்றும் நாம் ஏற்கனவே பேசி வைத்திருக்கும் நபரிடமிருந்து ஆயுதங்களை " வாவா நகர்" சென்று வாங்க வேண்டும் என்று பேசிக்கொண்டிருநதார்கள் என்றும் நான் ஏற்கனவே பிரச்சனையாக இருப்பதால் இது பற்றி யாரிடமும் பேசக்கூடாது என்று நினைத்து அங்கிருந்து சென்றுவிட்டேன் என்றும் அதன் பின்னர் 14.08.2007 அன்று நான் வழக்கம்போல் நான் கடையை

திறக்க சென்றபோது அந்த தெருவில் இருந்து எதிரும், புதிருமாக ஆட்கள் ஓடினார்கள் என்றும் அதன் பின்னரே அந்த தெருவில் 3 இஸ்லாமியர்களும் 3 இந்துக்களும் இறந்துபோனது தெரியவந்தது என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போதும் நான் தென்காசி அருகில் கொட்டாகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பணிபுரியும் இடத்திற்கு தினமும் இளஞ்சி, குத்துக்கல் வலசை , இலத்தூர் வழியாக செல்வேன். குத்துக்கல் வலசை மற்றும் இலத்தூர் பகுதியில் இஸ்லாமியர்கள் அதிகம் கடை வைத்து தொழில்செய்து வருகிறார்கள் என்றும் இலத்தூரில் அவர்கள் அதிகம் குடியிருந்து வருகிறார்கள் என்றும் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தினமும் வேலைக்கு செல்ல பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு எனக்கு தெரிந்த உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேள்வி பட்ட இரண்டுமதத்தை சேர்ந்தவர்களுக்கு இடையே ஏற்பட்டதாக கூறப்படும் பிரச்சனை என்பது இஸ்லாமியர் மற்றும் இந்துக்களுக்கிடையே ஆனதாகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு</u>**

எந்த செய்தி தாளில் நான் கேள்விபட்ட சம்பவத்தை படித்தேன் என்றுஞாபகம் இல்லை. செய்திதாளில் மதக்கலவரம் என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி ஞாபகம் இல்லை. எந்த செய்தி தாளில்

எந்த தேதியில் வெளிவந்த செய்தியை நான் படித்தேன் என்று ஞாபகம் இல்லை. அந்த வழக்கு சம்பந்தமாக என்னை யாரும் விசாரிக்கவில்லை.